## 35: பன்னிரண்டு மன்னர்கள்

மஹாடதிக்காவின் *(Mahadathika)* மரணத்திற்குப் பின் அவருடைய மகனான அமண்டகாமினி அபய்யா *(Amandagamani Abhaya)* என்பவர் ஒன்பது வருடங்களும் எட்டு மாத காலமும் ஆட்சி செய்தார். ஸ்துாபாவின் மேலிருந்த வெண் சாமரக் குடையின் *(parasol)* உயரத்தை இன்னுமும் உயரமாக்கி மெல் பகுதியிலும், கீழ் பகுதியிலும் வேதிகளைக் *(vedi- விடுதி)* கட்டினார். லோஹபாதசாவில் உள் வராண்டா மற்றும் முற்றத்தையும் கட்டினார். அது போல துாபராமாவின் உபோஸ்தாவிலும் கட்டினார். இரண்டுக்கும் உயர்தரமான இரத்தினங்கள் கொண்ட கூடாரத்தையும் *(pavilion)*, இராஜதாலின விகாராவையும் *(Rajatalena-vihara)* கட்டினார். அனுராதபுரத்தில் மஹாகமேன்தி *(Mahagamendi)* என்ற குளத்தை கட்டி அதை தட்ஷண விகாராவுக்கு அர்பணித்தார். அந்த நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் எவரும் கொலை செய்யக் கூடாது என கடுமையான உத்தரவு போட்டிருந்தார். பல்வேறு வகையான திராட்சைக் கொடிகளை பல இடங்களிலும் வளர்க்கச் சொல்லியிருந்த மன்னன் அமன்தியா, கிரிணிப் பழங்களையும், ஆடைகளையும் அமன்தகாமினி *(Amandagamani)* என்பவர் பெயரில் தானம் செய்தும் தன்னுடைய நற்காரியங்களைத் தொடர்ந்தார்.

அவருடைய இளைய சகோதரரான கனிராஜனுதிஸ்ஸா எப்பவர் தன்னுடைய சகோதரரைக் கொன்று விட்டு மூன்று வருடங்கள் ஆட்சியில் இருந்தார்.நாட்டு நலனுக்கு எதிராக இருந்த அறுபது பிட்குக்களை அவர்கள் வைத்திருந்த பொருட்களுடன் பிடித்து வரச் செய்து தீமை செய்த அவர்களை கனிரா

*(Kanira)* என்ற குகையில் அடைத்து வைக்குமாறு ஆணையிட்டார். கனிராஜனுவின் *(Kanirajanu)* மரணத்திற்குப் பின் அமந்தகாமனியின் புதல்வாரன குலபைய்யா *(Culabhaya)* ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு வருடம் ஆண்டார். அவர் தலைநகரின் தென் பகுதியில் குலகல்ல *(Culagallaka)* என்ற விகாராவைக் கோனகா நதிக்குப் *(Gonaka-river)* பக்கத்தில் கட்டினார்.

குலபைய்யாவின் மரணத்திற்குப் பின் அவருடைய சகோதரியான சிவாலி *(Sivali)* என்பவள் நான்கு மாதங்கள் ஆட்சியில் இருந்தாள். அவள் அமன்தாவின் *(Amanda)* மகள். ஆனால் அமன்தாவின் மருமகனான இலநகா *(Ilanaga)* என்பவர் சிவாலியை பதவியில் இருந்து துரத்திவிட்டு தான் மன்னன் ஆனார். ஒரு வருடம் பதவியில் இருந்த அவர் ஒரு நாள் டிஸ்ஸா ஏரிக்கு போய் இருந்த பொழுது அவருடன் சென்று இருந்த லம்பகன்னாக்கள் *(Lambakannas)* என்ற ஒரு இனத்தவர் அவரை தனியே விட்டுவிட்டு தலை நகருக்குத் திரும்பி விட்டனர். அதனால் கோபமுற்ற மன்னன் அவர்களுக்குத் தண்டைனையாக அவர்கள் அந்த ஏரியின் பின்புறத்தில் இருந்து மஹாதுபா வரை உறுதியான சாலையை அமைக்க வேண்டும் என ஆணையிட்டு, அவர்களுடைய வேலையைக் கண்காணிக்க கெளடலா *(caudalas)* என்பவர்களை மேற்பார்வையாளர்களாக நியமித்தார். அதனால் கோபமற்ற லம்பகன்னாக்கள் அனைவரும் திரண்டு வந்து மன்னனை சிறை பிடித்து அரண்மனையிலேயே கைதியாக வைத்து நாட்டின் ஆட்சியை தாம் ஏற்றனர். அந்த மன்னனின் மனைவியோ தன்னுடைய மகன் கண்டமுகசிவாவை ஒரு துணியால் மூடி மறைத்து தன்னுடைய பணிப் பெண்ணிடம் கொடுத்து பட்டத்து

யானையிடம் சென்று அவனை அதனிடம் விட்டுவிட்டு வருமாறு கூறி இருந்தாள். அதோடு அந்த யானைக்கு ஒரு செய்தியையும் அனுப்பி இருந்தாள்.

அந்த வேலைக்காரிகள் சிறுவனை யானையிடம் அழைத்துச் சென்று 'இது எங்களுடைய மன்னின் குழந்தை. அவர் சிறையில் இருக்கின்றார். இந்த சிறுவனை மன்னனை சிறைப் பிடித்துள்ள அந்த மூர்கர்கள் கொல்வதை விட உன்னால் கொல்லப்படட்டும் என்பதற்காக இராணி உன்னிடம் விட்டு விட்டு வரச் சொல்லி அனுப்பி உள்ளார்' என்று கூறிவிட்டு அவனை அதன் காலடியில் கிடத்தினர். அதைக் கேட்டு கண்ணீர் வடித்த யானை கோபமடைந்து தன்னைக் கட்டி இருந்த கயிற்றை அறுத்துக் கொண்டு, கம்பத்தை உடைத்து ஆவேசமாக அரண்மனையை நோக்கி ஓடியது. அரண்மனையின் பிரதான வாயிலை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற யானை சிறையில் மன்னன் இருந்த இடத்தை அடைந்து சிறையின் கதவுகளை உடைத்து மன்னனை மீட்டு தன் முதுகில் அவரை ஏற்றிக் கொண்டு மஹாதித்தாவிற்குச் ஓடிச் சென்றது. அந்த இடத்தில் இருந்த ஒரு கப்பலில் மன்னனை ஏற்றிவிட்ட பின் மலாயாவை நோக்கி தானும் சென்று விட்டது.

அந்த மன்னன் அடுத்த நாட்டிற்குச் சென்று மூன்று வருடங்கள் வாழ்ந்த பின் படையை திரட்டிக் கொண்டு ரோஹன்னாவிற்குச் சென்றார். சக்கஹரசோபா *(Sakkharasobbha)* என்ற துறைமுகத்தை அடைந்தவர் அங்கு இன்னும் பெரும் சேனையை திரட்டினார். இதற்கிடையே மலாயாவில் இருந்து பட்டத்து யானை தென்புற வாயில்

வழியாக ரோஹனாவில் புகுந்தது. துலதாரா *(Tuladhara)* என்ற விகாராவில் கபி ஜாதகாவை பெரிய தேராவிடம் இருந்து கற்றறிந்திருந்த மஹாபாதுமா *(Mahäpaduma)* என்ற ஜாதகா கதைகளை போதித்து வந்தவர் *( preacher of jatakas )*, புத்த சமயத்தில் ஏற்பட்டிருந்த பற்றுதல் காரணமாக, நாஹும விகாராரை *(Nagamahavihara)* விரிவாக்கினார். அதன் பின் எண்ணூறு நேரான தனுக்களின் நீளத்திற்கு *(ஒரு தனு என்பது எட்டு அடியாகும்)* ஸதுபாவின் எல்லையை இன்னமும் விரிவாக்கி மஹானமாவின் அருகில் திஸ்ஸா என்ற குளத்தையும், துரா *(Dura)* என்ற குளத்தையும் கட்டி இருந்தார்.

தம்மால் வெளியேறிய மன்னன் பெரும் படையுடன் வருகின்றார் என்பதைக் கேள்விப்பட்ட லம்பகன்னாக்களும் யுத்தத்திற்குத் தயார் ஆயினர். காபலகண்டா *(Kapallakkhanda)* என்ற நகர நுழை வாயில் அருகே இருந்த ஹன்கரபிட்டி *(Hankarapitthi)* என்ற இடத்தில் இரு பிரிவினரும் பயங்கரமாக மோதிக் கொள்ள பலரும் மாண்டனர்.

கடல் பயணம் செய்திருந்ததினால் ஏற்பட்டிருந்த களைப்பினால் மன்னனின் படை வீரர்கள் சோர்ந்து போய் பின் வாங்கத் துவங்க, மன்னன் தானே யுத்த முனைக்கு சென்றார். ஆக்கிரோஷமாக அவர் யுத்தம் செய்து எதிரிகளின் தலைகளை சீவிக் கொண்டு இருக்க பயந்து போன லம்பகானாக்கள் அபயக் குரல் எழுப்பியவண்ணம் தம் தலையை மூடிக் கொண்டும் தொங்கப் போட்டுக் கொண்டும் அவருடைய வண்டியின் சக்கரத்தின் முன் சென்று வழிமறித்தபடி நிற்க அவர்களைக் கொல்ல வேண்டாம் என

என மன்னன் ஆணையிட்டு அதற்குப் பதில் அவர்களை உயிருடன் பிடிக்குமாறு கட்டளை இட்டார்.

வெற்றி வீரராக தலைநகரில் நுழைந்த மன்னனின் தலை மீது இராஜ்யக் குடை பிடிக்கப்பட்டு இருக்க திஸ்ஸா விழாவிற்குச் சென்றார். அதன் பின் தன்னுடைய படைவீரர்கள் சூழ ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தனக்கு கிடைத்த நற்பலனை எண்ணி மகிழ்ந்தவாறு ,தன்னை விரோதித்துக் கொண்ட லம்பகானாக்களை பிடித்து இருவர் இருவராக கட்டி, அவர்களை வரிசையாக ஒருவர் பின் ஒருவராக நிற்க வைத்து அவர்களையும் சேர்த்துக் கட்டி, கட்டிய கயிற்றின் மறு முனையை இரதத்தில் கட்டி விலங்குகள் இழுப்பது போல அவருடைய இரதத்தை இழுத்துக் கொண்டு போகுமாறு செய்தார். அரண்மனையின் வாசலில் சென்றவுடன் அவர்களுடைய தலைகளை சீவி விடுமாறு கட்டளை இட்ட பொழுது அதை அவருடைய தாயார் தடுத்து நிறுத்தினாள். அவள் 'இவர்கள் உன் இரதத்தை இழுத்து வந்ததினால் எருதுகளுக்கு *(oxen)* சமமானவர்கள். ஆகவே அவர்களுடைய தலையை சீவாமல், அவர்களுடைய கொம்பையும், கால் குளம்பையும் சீவி எறி' எனக் கூற அதன்படி அந்த லம்பகானாக்களின் மூக்குகளையும், கால் விரல்களையும் மட்டும் வெட்டி அனுப்புமாறு ஆணையிட்டார். எந்த நகரில் யானை தன்னை காத்து நின்றதோ அந்த இடத்திற்கு யானைக்கு மரியாதை செலுத்தும் வகையில் ஹத்திபோகா *(Hatthibhoga)* என்ற பெயர் வைத்தார். இலங்கா இப்படியாக ஆறு வருடங்கள் அனுராதபுரத்தை அரசாண்டு வந்தார்.

அவருடைய மரணத்திற்குப் பின் அவருடைய மகனான கண்டமுக சிவா *(Candamukha Siva)* என்பவர் பதவி ஏற்று

எட்டு வருடங்கள், ஏழு மாதம் பதவியில் இருந்தார். அந்த மன்னன் மானிக்கராகமகா *(Manikaragamaka)* என்ற இடத்தில் இருந்த ஈசாரசமானா *(Issarasamana)* என்ற விகாராவின் உபயோகத்திற்காக ஒரு குளத்தை வெட்டிக் கொடுத்தார்.

கண்டமுக சிவாவின் இளைய சகோதரர் யாசலலகதிஸ்ஸா *(Yasalalakatissa)* என்பவர் தமது சகோதரரை திஸ்ஸாவில் நடந்த வியைாட்டுப் போட்டியில் கொன்று விட்டு தான் பதவியைப் பிடித்து ஏழு வருடங்களளும் எட்டு மாதங்களும் ஆட்சி செய்தார்.

அந்த அரண்மனையின் காவலாளியாக இருந்த தத்தா *(Datta)* என்பவரின் புதல்வாரன சுபா *(Subha)* என்பவன் மன்னனைப் போலவே உருவ ஒற்றுமையைக் கொண்டு இருந்தான். அவனும் அந்த இடத்தில் காவலாளியாகவே இருந்தான். மன்னன் ஊரில் இல்லாத நேரங்களில் எவருக்கும் தெரியாமல் மன்னனுடைய அணிகலன்கள், தலைப்பாகை, உடைகள் போன்றவற்றை அணிந்து கொண்டு அவருடைய ஆசனத்தில் சென்று அமர்ந்து கொள்வான். அவனை சுபா என அறியாமல் அவனை மன்னன் யாசலலகா எனவே நினைத்து அவரை மந்திரிகள் வணங்க, காவலர்கள் தலை குனிந்து மரியாதை செய்தனர். இது பலமுறை நடந்தது. உண்மையை ஒருவரும் அறிந்திருக்கவில்லை. ஒருநாள் அந்த காவலாளி சுபா அரசனை பெயர் கூவி அழைத்து கேலியாக சிரித்துக் கொண்டு இருக்க தன்னைப் பார்த்து ஏன் அவன் கேலியாக சிரிக்கின்றான் என மன்னன் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே அவனைக் கொன்று விட்டு சுபா பதவியில் அமர்ந்தான். அவன் சுப்பராஜா *(Subharaja)* என்ற பெயரில் ஆறு வருடங்கள் ஆட்சி செய்தான்.

அபயகிரி மற்றும் மஹாவஹாரா என்ற இரண்டு விகாராக்களிலும் அவர் பல அறைகளைக் கட்டச் சொல்லி அந்த இடத்திற்கு தன்னுடைய பெயரை வைக்கச் சொல்லி இருந்தார். உருவிலாவுக்கு அருகில் வல்லி விகாரா என்பதையும் அதன் கிழக்குப் பகுதியில் ஏகாத்வாரா என்ற விகாராவையும், மஹாவேலி கங்கையின் *(Mahawaeliganga)* வாயருகே நந்திகமாகா என்ற விகாராவையும் கட்டினார்.

லும்பகானா வம்சத்தினை சேர்ந்த வசபா *(Vasabha)* என்பவன் படைத் தலைவராக இருந்த தன்னுடைய மாமனுடன் வடக்குப் பகுதியில் வசித்து வந்தார். திக்கா யாசலாக்கா என்பவர் ஒரு முறை வாசபா என்பவர் நாட்டை ஆளுவார் என ஜோசியம் கூறி இருந்தினால் நாட்டில் வசபா என்ற பெயருடைய அனைவரையும் கொன்று விடுமாறு மன்னன் ஆணையிட்டார். ஆகவே வசபாவின் மாமன் தன்னுடைய மனைவியுடன் கலந்தாலோசனை செய்தப் பின் அவனை மன்னனிடம் அழைத்துச் செல்ல முடிவு செய்தார்.

அந்த படைத் தலைவருடைய மனைவி வசபாவைக் காப்பாற்ற நினைத்தாள். அவர்கள் மன்னனிடம் செல்லக் கிளம்பிய பொழுது வேணடும் என்றே சுண்ணாம்பு கலக்காத வெற்றிலைப் பாக்கை மடித்துக் கொடுத்தனுப்பினாள். படைத் தலைவர் அரண்மனையின் வாயிலை அடைந்தவுடன் சுண்ணாம்பு இல்லாத வெற்றிலைப் பாக்கைப் பாத்ததும், தன்னுடைய மருமகனை விட்டிற்குச் சென்று சுண்ணாம்பு எடுத்து வருமாறு அனுப்பினார். வீட்டிற்கு வந்த வசபாவிடம் படைத் தலைவனின் மனைவி ஆயிரம் பணம் கொடுத்து விவரத்தைக் கூறி அங்கிருந்து வேறு இடத்திற்கு தப்பி ஓடி

அங்கிருந்து தப்பி ஓடியவன் மகா விகாராவை அடைந்து தேராவிடம் தஞ்சம் அடைய, அவர் அவனுக்கு ஆடைகள், உணவு என அனைத்தும் தந்து உதவினார். அங்கிருந்த பொழுது ஒரு தொழு நோயாளி அவன் ஒரு காலத்தில் மன்னனாகப் போகின்றான் என ஆருடம் கூற அவன் மிக்க மகிழ்சி அடைந்தான். கண்டகுட்டா மற்றும் கபல்லபுவா என்றவர்களின் கதையில் கூறப்பட்டுள்ளது போல அவர் ஒரு புரட்சியாளனாக மாறி ஆட்களைத் திரட்டிக் கொண்டு ஒவ்ஒரு கிராமமாக கைப்பற்றிக் கொண்டு ரோஹன்னாவை அடைந்தார். இரு வருடங்களில் அங்கிருந்த மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொண்டு படையை பலப்படுத்திக் கொண்டு தலைநகரை நோக்கி சென்று சுபராஜாவுடன் யுத்தம் செய்து வெற்றி பெற்று தன்னை அதிபராக வசபா முடிசூட்டிக் கொண்டார். அவருடைய மாமன் யுத்தத்தில் மரணம் அடைந்தார். ஆனால் அவருக்கு முன்னர் தப்பி ஓட உதவிய அவருடைய மாமனின் மனைவி போதா *(Pottha)* என்பவளை மன்னன் வசபா தனது நாட்டின் இராணியாக்கினார்.

ஒரு முறை அவர் ஜோதிடர் ஒருவரை அழைத்து தன்னுடைய ஆயுள் காலம் எத்தனை எனக் கேட்ட பொழுது அவரும் இன்னும் பன்னிரண்டு ஆண்டுகள்தான் அவர் உயிர் வாழ்வார் என்றார். அவனுக்கு ஆயிரம் பணம் கொடுத்து அந்த விஷயத்தை இரகசியமாக வைத்துக் கொள்ளச் சொன்னார். அதன் பின் அவர் புத்த பிட்குக்களை அழைத்து அவர்களை மரியாதையுடன் வணங்கிய பின் தன்னுடைய மரணத்தை தள்ளிப் போட வேறு ஏதும் மார்கம் உள்ளதா என வினவினார். அதற்கு அவர்கள் அவருடைய வாழ்கை முறையை சற்று மாற்றிக் கொண்டு, அனைவருக்கும் தண்ணீர் வடிகட்டிகளை தானமாகத் தர வேண்டும் ( *குடிக்கும் நீரில்*

*உயிர் ஜன்துக்கள் இருந்தால் அவை வயிற்றுக்குள் சென்று மரணம் அடையாது),* நோயாளிகளுக்கு மருத்துவ உதவிகளை செய்ய வேண்டும், இடிந்து கிடக்கும் கட்டிடங்களைப் புதுப்பிக்க வேண்டும், ஐந்து போதனைகளை கடை பிடிக்க வேண்டும், உபோஸ்தா தினத்தன்று உபவாசம் இருக்க வேண்டும் போன்றவற்றைக் கடைபிடித்தால் ஆயுளை அதிகரித்துக் கொள்ள முடியும் என்றனர்.

அதனால் தீபகற்பத்தில் இருந்த அனைத்து புத்த பிட்குக்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் மூன்று ஆடைகள் தானம் செய்தார். மேலும் வேறு இடங்களில் இருந்த தேராக்களுக்கும் ஆடைகள் கொடுத்து அனுப்பினார். முப்பத்தி இரண்டு இடங்களில் தேன் கலந்த பால் பாயசம் கொடுக்கப்பட, இன்னும் அறுபத்தி நான்கு இடங்களில் பல்வேறு தானங்கள் செய்யப்பட்டன. சிடியா பப்பத்தா, தூபராமாவில் இருந்த சிடியா, ஸ்துாபி, மற்றும் போதி மரத்து ஆலயம் போன்ற நான்கு இடங்களில் ஆயிரம் விளக்குகளை ஏற்றினார். சிட்டலகுட்ட *(Cittalakuta)* விகாராவில் பத்து அழகிய ஸ்துாபிகளையும், இடிந்த கட்டிடங்களை சீரமைத்தும், வல்லியேற விகாரில் *(Valliyera-vihara)* இன்னொரு மஹாவல்லிக்கோட்டா *(Mahavalligotta)* என்ற விகாராவையும் கட்டினார். அது மட்டும் அல்லாது அனுராமா *(Anuráráma)* என்ற விகாராவையும் மஹாகமாவிற்கு அருகில் கட்டினார். ஹெலிகமா *(Heligáma)* என்ற கிராமத்தில் இருந்த எட்டு கரிசா அளவிலான நிலங்களையும் அவற்றுக்கு வழங்கினார். திஸ்ஸவாதமனாகா *(Tissavaddhamanaka)* என்ற இடத்தில் முசிலா விகாராவைக் *( Mucela-vihara)* கட்டினார். அலிசாரா *(Alisára)* கால்வாயில் இருந்து ஓடிய ஒரு பகுதி நீரை அந்த

விகாராவுக்கு ஒதுக்கினார். காலம்பத்தித்தா *(Galambatittha)* என்ற இடத்தில் இருந்த ஸ்துர்பாவின் மீது இன்னொரு செங்கல் வரிசை வைத்து பூச்சு போட்டு அதை பலப்படுத்தினார். அங்கு இன்னொரு உபோசதாவைக் கட்டி அங்கிருந்த விளக்குகள் அனைத்தும் எரிந்து கொண்டிருக்கும் அளவுக்கு எண்ணைத் தருமாறு கூறி இருந்தார். ஆயிரம் கரிசா அளவு நிலத்தில் ஒரு பெரிய குளம் வெட்டச் சொன்னார். அதை அந்த விகாராவுக்கு தானமாகக் கொடுத்தார். அது போலவே ஈசரசமானகா *(Issarasamanaka)* விகாரிலும், துாபராமா ஸ்துாபி ஆலயத்திலும் உபோசதா மண்டபம் கட்டினார். மஹாவிகாராவின் மேற்குப் பக்கம் பார்த்திருக்குமாறு பல அறைகளைக் கட்டினார். பேய் மழையினால் சேதம் அடைந்திருந்த கடுசாலா *(Catussala)* என்ற கட்டிடத்தை புனரமைத்தார். போதி மரத்தடியின் முற்றத்தில் நான்கு அற்புதமான புத்தர் சிலைகளை நிறுவினார். மன்னனின் மனைவியான போத்தா அதே இடத்தில் ஸ்துாபாவின் வழிபாட்டிற்கு ஒரு ஆலயம் அமைத்தாள். அது முடிந்ததும் பெரிய விழா எடுத்து பல்வேறு தானங்கள் தர ஏற்பாடு செய்து இருந்தார். புத்த சமய போதனைகளை செய்து வந்த புத்த பிட்குக்களுக்கு அவர்களுக்கு என்ன தேவையோ அவற்றைத் தரவும், வெண்ணை மற்றும் அவர்களுக்கு வெல்லக் கட்டிகள் தரவும் ஏற்பாடுகள் செய்திருந்தார். நான்கு நுழை வாயில்களிலும் ஏழைகளுக்கு அன்ன தானம் செய்யப்பட்டன. நோயுற்று இருந்த பிட்குக்களுக்கு நோயாளிகளுக்கான உணவுகள் தரப்பட்டன. கயான்தி *(Cayanti)* , ராஜுபாலா *(Rajuppala)*, வஹா *(Vaha)*, கோலம்பகாஹா *(Kolambagamaka)*, மஹாநிக்கவட்டி *(Mahanikkhavatti)*, மஹாரமேதி *(Maharametti)*, கோஹலா

*(Kohãla)*, காலி *(Káli)*, கம்புட்டி *(Cambuti)*, கதாமாகனா *(Cathamangana)* மற்றும் அக்கிவாதமானகா *(Aggivaddhamanaka)* என்ற பெயர்களில் பன்னிரண்டு குளங்களும் கால்வாய்களும் வெட்டப்பட்டன. நகரின் பாதுகாப்பை முன்னிட்டு நகரைச் சுற்றி இருபத்தி ஐந்து முதல் இருபத்தி ஏழு அடி உயர சுவற்றை எழுப்பினார். அவை மீது கண்காணிக்கும் நிலைகளை நிறுவினார். அரண்மனை தோட்டத்திலும் குளம் வெட்டி வாத்து போன்ற பறவைகளை அங்கு வசிக்க விட்டார்.

நகரில் பல இடங்களிலும் குளியல் அறைகள் கட்டி அதன் பக்கத்தில் பாதாள அறை மூலம் கால்வாய் நீர் வர ஏற்பாடுகள் செய்து இருந்தார். இப்படியாக பற்பல நல்ல காரியங்களை செய்து வந்தவனுக்கு பல இடைஞ்சல்கள் ஏற்பட்டாலும் அவை தானாகவே விலகிப் போக அவர் நாற்பத்தி நான்கு ஆண்டுகள் ஆட்சி செய்து நாற்பத்தி நான்கு வேசகா பண்டிகைகளையும் நடத்தி வைத்தார்.

வாசபாவிடம் இருந்த பயத்தின் காரணமாக முன்னர் சுப்பராஜா தன்னுடைய மகளை கட்டுமானப் பணியில் இருந்த ஒரு தொழிலாளியிடம் அவளைப் ஒப்படைத்து பாதுகாப்பாக வளர்த்து வருமாறு கேட்டுக் கொண்டு இருந்தார். வாசபாவினால் சுப்பராஜா கொல்லப்பட்டவுடன் அவருடைய மகளை தன்னுடைய மகளைப் போல பாதுகாப்பாக வளர்த்து வந்த அந்த தொழிலாளிக்கு தினமும் அவள்தான் உணவு எடுத்து சென்று வந்தாள்.

ஒரு நாள் அவள் உணவு எடுத்து வருகையில் கடம்பா செடிகளுக்கு இடையே ஏழு நாட்களாக மயக்கமாக கிடந்த

துறவி ஒருவரைக் கண்டு அவருக்கு உணவு தந்தாள். அதனால் அவள் வீட்டிற்குச் சென்று மீண்டும் தன் வளர்ப்பு தந்தைக்கு உணவு தயாரித்துக் கொண்டுவரவேண்டி இருந்தது. அன்று தாமதமாக வந்ததின் காரணத்தைப் பற்றிக் கேட்டறிந்த அவன் மனம் மகிழ்ந்து போய் தினமும் அந்த துறவிக்கு உணவு தருமாறு கூறினான். மறு நாள் மயக்கம் முழுதும் கலைந்து எழுந்தவர் என்றாவது ஒரு நாள் அரச குடும்பம் அவளிடம் சென்றால் அந்த இடத்தை நினைவில் வைத்திருக்கும்படி கூறிய பின் இறந்து விழுந்தார்.

வசபாவின் மகனுக்கு திருமணம் செய்யும் வயது வந்தது. அந்த பெண்ணை *(சுப்பராஜாவின் பெண்)* கண்ட அந்த கிராமத்தினர் அவள் முகத்தில் ராஜ தோரணை வீசுவதைக் கண்டு மன்னனிடம் சென்று அந்த பெண்ணைப் பற்றிக் கூறினர். அவரும் அவளை அழைத்து வரச் சொல்லி ஆட்களை அனுப்பிய பொழுது அந்த கட்டுமானப் பணியில் இருந்த தொழிலாளி மன்னனிடம் சென்று அவள் சுப்பராஜா என்ற மன்னனின் மகள் என்ற உண்மையைக் கூறி அவள் தன்னிடம் வளர்ந்த கதையைத் தெரிவிக்க மன்னர் மகிழ்ந்து போனார். அவளை தன்னுடைய மகனுக்கே மணம் செய்வித்து வைத்தார்.

வசபாவின் மரணத்திற்குப் பின் அவருடைய மகன் வங்கனசிகடிஸ்ஸகா *(Vankanasikatissaka)* பதவி ஏற்று மூன்று வருடங்கள் அனுராதபுரத்தை ஆண்டு வந்தார். கோனா *(Gonariver)* நதிக்குப் பக்கத்தில் மஹாமங்கலா *(Mahámangala)* என்ற விகாராவை வங்கனசிகடிஸ்ஸகா கட்டினார். அவருடைய மனைவி மஹாமட்டா *(Mahámattá)* உயிர் இழந்த தேரா தன்னிடம் கூறி இருந்தபடி ஒரு

விகாராவை அவர் மரணம் அடைந்த இடத்தில் அமைக்க தேவையான பணத்திற்கு ஏற்பாடு செய்தாள்.

வங்கனசிகடிஸ்ஸகா மரணம் அடைந்ததும் கஜபாஹுககாமினி *(Gajabahukagamani)* என்ற அவருடைய மகன் இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆட்சி செய்தார். தன்னுடைய தாயாரின் கட்டளைப்படி அவர் தேரா மரணம் அடைந்த இடத்தில் முதுவிகாரா என்ற பெயரில் விகாராவை அமைத்து தாயாருடைய வாக்குறுதியை நிறைவேற்றினார். அதற்கான கட்டுமான செலவிற்காக அவருடைய தாயார் ஒரு லட்சம் *(1,00,000)* பணம் தந்தாள். இப்படியாக அந்த விகாராவை தாயும் மகனும் சேர்ந்தே கட்டினர். அது மட்டும் அல்லாமல் அதே இடத்தில் பலரிடமும் இருந்தும் பெற்றிருந்த நிலத்தில் ஸ்தூபி ஒன்றையும் நிர்மாணித்தார்.

அவர் அபயூட்டர *(Abhayuttara)* என்ற ஸ்தூபாவை கட்டி நான்கு வாசல்களை அமைத்து ஒவ்ஒன்றுக்கும் இடையே செல்ல குறுக்கு வழியையும் அமைத்து இருந்தார். காமினிடிஸ்ஸா குளம் *(Gamanitissa-tank)* என்பதைக் கட்டி அதை அபயகிரி விகாராவுக்கு தானமாகத் தந்தார். மாரிகவட்டித் தூபாவை இன்னும் ஒரு மேல் பூச்சு பூசி பலப்படுத்தினார். நூற்று லட்ச *(100,00,000)* பணத்தில் நிலங்களை வாங்கி அங்கிருந்த பிட்குக்களின் உபயோகத்திற்கு தந்தார். அவருடைய கடைசி கால ஆட்சியில் ரமுக *(Ramuka)* விகாரா என்பதைக் கட்டி நகரில் மஹேஜனசாலா *(Mahejasanasala hall)* என்ற கூடத்தையும் அமைத்தார்.

கஜபாஹுவின் மரணத்திற்குப் பின் அவருடைய மாமனார்

மஹாலக்க நாகா *(Mahallaka Naga)* என்பவர் ஆறு ஆண்டுகள் ஆட்சி செய்தார். அவர் கிழக்குப் பகுதியில் சேஜலாகா *(Sejalaka)* என்ற விகாராவையும், கோடபாபடா *(Dakapasana)* என்ற விகாராவை தெற்குப் பகுதியிலும், தகபாசனா *(Dakapasana)* என்ற விகாராவை மேற்குப் பக்கத்திலும், பீஜகாம தனவேலீ *(Bijagama Tanaveli)* என்ற இடத்தில் நாகதீபசலிபப்பஜ்தா *(Nagadipa Sálipabbata)* என்ற விகாராவையும், ரோஹனா நகரில் தோபாலனகப்பப்பட்தா **(Tobbalanágapabbata)** என்ற விகாராவையும் , நகருக்குள் கிரிஹாலிகா *(Girihálika)* என்ற விகாராவையும் சேர்த்து ஏழு விகாராக்களை தன்னுடைய ஆட்சி காலத்தில் கட்டினார்.

பெரும் செல்லத்தைப் பெற்றாலும் இப்படிப்பட்ட போற்றத்தக்க நல்ல காரியங்களை செய்ய நல்லவர்களால் மட்டுமே முடியும், ஆனால் மூடர்களோ தம்முடைய சுகத்திற்காக மேலும் மேலும் செல்வத்தை அடையும் பேராசை கொண்டு தீமைகளை மட்டுமே செய்கின்றனர்.

புனிதரின் பக்தி மார்கத்தில் இணைந்த புத்த பக்தர்களின் மனதில் பேரானந்தம் பொங்கிட வழி வகுத்த கருணா மூர்த்தியின் முப்பத்தி ஐந்தாம் பாகமான ‘ பன்னிரண்டு மன்னர்கள் ’ என்ற பகுதி முடிவுற்றது.

CLICK HERE TO VIEW ENGLISH VERSION